- அகம் என்பது காலம், எண்ணத்திற்குரியது, மனத்தால் அறியப்படுவது, புலன்களால் அறிய முடியாதது. எண்ணம் எந்த புலனுணர்விற்கும் புலப்படாதல்லவா?
- ஆத்மா அகம், புலனாகப் பிரிகிறது என்பது தத்துவம்.
- உள்ளே போவது என்றால் புலனைக் கடந்து மனத்தை அடைவது. மேலும் தொடர்ந்து உள்ளே போனால் மனத்தைக் கடந்து ஆத்மாவை அடைவது. அதனால் உள்ளே போக முடிந்தால் யோகம் பலிக்கும்.
- சாதாரண மனிதன் உள்ளே போக விரும்பினால், அது முடியுமா என அறிய முற்பட்டால், முதற்காரியமாக அவன் பேச்சை நிறுத்த வேண்டும், வாய் மூடி மௌனியாக வேண்டும்.
- அது பெரிய முதற்கட்டம். அடுத்தது மனத்தில் எண்ணம் நின்று மௌனம் வர வேண்டும்.
- இவை யோக சித்திகள். சிலருக்குத் தானே அமையும்.
- ஏதோ ஒரு நேரம் இவை எழுவது யோகப் பக்குவத்தைக் குறிக்கும்.
- நீடிப்பது, நிரந்தரமாவது மௌனம் காக்கும் முனிவர் பெறும் சித்தி.
- எல்லா யோகங்கட்கும் மௌனம் உரியதுபோல் பூரண யோகத்திற்கும் மௌனம் முக்கியமானது.



- இந்த யோகத்தில் மௌனம் செயல்படுவது சற்று மாற்றமாக இருக்கும்.
- வாழ்வை ஏற்கும் யோகம் என்பதால் இந்த யோகம் செயலை விலக்காது, ஏற்கும்.
- செயலும், பேச்சும் இந்த யோகத்தில் மௌனத்தை வெளிப்படுத்த வேண்டும்.
- தண்டனை அன்பை வெளிப்படுத்துவதுபோல் மௌனம் பேச்சை வெளிப்படுத்தும்.
- ஆன்மீக அருள் உயரும் நிலையில் தண்டனை அருளாகும் என்பது தத்துவம்.
- "அவனே தண்டித்தால் ஜெயமன்றோ வானவர்க்கு" என்பது பாடல்.
- போலீஸ் தடியடிப் பிரயோகமும், சுட்டு வீழ்த்துவதும் அமைதியை நிலைநாட்டுவதற்கு.
- தாயின் கண்டிப்பு அன்பால் கண்டிப்பதாகும். நல்லது செய்யும் கண்டிப்பு அது.
- பேச்சற்ற மௌனம் முதல் நிலை. பேசினால் அந்த மௌனம் கலையும். உயர்ந்த மௌனம் பேசினால் கலையாது, வளரும்.
- செலவு செய்தால் பணம் குறையும். செலவு கம்பனியில் செய்தால், கடையில் செலவு செய்தால் பணம் வளரும். அது செலவால் வளரும் பணம்.
- வேலை செய்தால் களைப்பது இயல்பு. உற்சாகமாக வேலை செய்தால் களைப்புத் தெரியாது. படைப்பாளி உற்சாகமாக ஓவியம் எழுதினாலும், கதை எழுதினாலும், சிற்பம் செய்தாலும், தெம்பு அபரிமிதமாக வளர்ந்தபடியிருப்பது அனுபவம்.
- இது மௌனத்தின் உயர்ந்த நிலை.
- பேசாத நிலையில் இம்மௌனத்தில் சொல் அழியும். மனம் லயிக்கும்.

- மனம் லயிப்பது பெரு நிலை, ஆத்மா லயிப்பது சித்தி.
- ஆத்மா அகத்தில் லயிப்பது யோகம். ஆத்மா புறத்தில், செயலில் லயிப்பது பூரண யோகம்.
- பூரண யோக சமாதி, விழிப்பில் ஏற்படும் சமாதி.
- செயல் அமைதியாகி, அதனால் வேகம் பெறுவது யோகி வாழ்வை ஏற்பது.
- உள்ளே போனால் படிப்படியான நிலைகள் உண்டு. மேற்சொன்னவை சில.
- ஒரு அன்பருக்கு முதற்கட்டம் தானே எழுமானால், அவருக்கு பூரண யோகப் பக்குவம் உண்டு என்று தெரிகிறது.

***

## 79. உண்மை (Sincerity)

- Reality, Sincerity, Truth என்பவற்றை சத்தியம், உண்மை எனக் கூறலாம்.
- சத்தியம் என்றால் சத்திலிருந்து எழுவது. உள்ளது உண்மை. அது உள்ளேயுள்ளது.
- Sincerity என்ற சொல் எல்லா இடத்து உண்மைக்கும் பொருந்தும்.
- குடும்பம், நட்பு, தம்பதிகள், நாணயம், தர்ம நியாயம், தர்ம சங்கடம், தொழில், மனிதன், மனிதாபிமானம், உறவு அனைத்திலும் உள்ள உண்மையை Sincerity குறிக்கும்.
- தலைப்பில் கூறும் உண்மை ஆத்மாவுக்குரியது. மனம், உயிர், உடல், ஜீவன், ஆத்மாவுக்கு உண்மையாயிருப்பதைத் தலைப்பு குறிக்கிறது.



- அந்த உண்மையுள்ளவரை நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்கிறோம்.

***யோகத்திற்கு Sincerity அஸ்திவாரம்.***
***எது தவறினாலும் Sincerity தவறாது.***

- பொய்யின் வாடையுள்ள இடத்தில் Sincerity எழாது.
- மாற்றாந்தாய், முதல் மனைவியின் குழந்தைகட்கு அன்பு செலுத்துவது அதைச் சேரும்.
- மாமியார், மருமகள் உறவில் உள்ள அன்பு அதற்குரியது.
- விலகிய நண்பர், எதிரியானவருக்கு நியாயம் செலுத்துவது அரிது. அவர்கட்கும் நம் அன்பு உரிய இடம் உண்டு.

  அது Sincerity சின்சியாரிட்டிக்கு உரியது - “இன்று போய் நாளை வா”.
- பக்திக்கு சின்சியாரிட்டி உண்டு. ஆனால் இரண்டும் வேறு.
- தொழிலில் இயல்பாக மார்க்கட்டிற்கு உண்மையானவர்க்கு மார்க்கட் செலவு செய்ய வேண்டிய இடத்தில் வருமானம் தரும்.
- டெக்னாலஜிக்கு கோடிக்கணக்கான செலவு செய்ய வேண்டும். மனிதனுக்கு டெக்னாலஜி விஷயத்தில் எது உண்மை என புரிந்தால் பல கோடி செலவுள்ள இடத்தில் பல நூறு கோடி வருமானம் வரும்.
- Chit சீட்டுக் கம்பனியில் சீட்டு எடுத்தவரிடம் அதன்பின் பணம் வசூல் செய்வது கடினம்.

  கம்பனிக்கு சட்டம் உண்டு, பணம் உண்டு, வசூல் உண்டு, நியாயம் உண்டு.

  இவற்றிற்கெல்லாம் உரிய உண்மையுண்டு. அந்த உண்மையைப் பாராட்டினால் சிரமம் திருவுருமாறி வசதியாகும்.
- நஷ்டம் வந்த தொழிலை நிமிர்த்த 30 இலட்ச ரூபாய் வேண்டும்

என்ற இடத்தில் தொழிலுக்குரிய உண்மை முதலிலிருந்தே செலவை வருமானமாக மாற்றும்.

- ஆத்மாவுக்கு எது உண்மை என அறிந்து, அதை ஏற்றால் வாழ்வு ஆன்மீக வளம் பெறும். அது உள்ளதைக் குறிப்பது கலகலப்பான குணம் (cheerfulness).
- சிடுமூஞ்சி, உம்மணாமூஞ்சி, எண்ணெய் வழியும் முகம், கடுகடு என்று பேசுபவர், சிரித்தறியாதவர்கட்கு எதிராக மலர்ந்த முகம், சிரித்த முகம், பிரியமான பழக்கம், மிருதுவான பேச்சு, இனிமையான மனப்போக்கு அவற்றைக் குறிக்கும்.

***விரதங்களைவிட கலகலப்பான குணம்***
***யோகத்திற்குரிய மன நிலை என அன்னை கூறுகிறார்.***

- இந்த உண்மையில்லாத இடமில்லை.
  - மேஜையைத் துடைப்பதை நாள் தவறாமல், நேரம் தவறாமல், பளிங்கு போல் துடைப்பது சுத்தத்திற்குரிய உண்மை.
  - பாட்டு என்பது சங்கீதம். அதில் சாகித்தியம் உண்டு, பாடுபவர் திறமை உண்டு, குரல் முக்கியம், ஸ்தாயி, உச்ச ஸ்தாயியை எட்டும் திறன் உண்டு. தனியே பாடும்பொழுது உள்ள ஸ்தாயி, சபையில் பாடும் பொழுது எழும் ஸ்தாயியிலிருந்து வேறுபட்டது. சபைக்கு உண்மையுண்டு, பாட்டுக்கும் உண்மையுண்டு, பாடுபவர்க்கும் உண்டு, அதே நாள், அதே நேரம் போன்றவற்றிற்கும் அததற்குரிய உண்மையுண்டு. இவை பகுதியான உண்மைகள்.

  ***இவை அனைத்தும் இணைந்து இழையும்***
  ***முழுமைக்குரிய உண்மை பிரம்மத்திற்குரிய***
  ***உண்மை.***

  - அது வாழ்வில் இல்லாத இடமில்லை.



- மன நிலையைக் கடந்த ஆத்ம நிலையில் அதற்குரிய இடம் உருவாகி சபையை நோக்கி அதன் முழுமையுடன் கலக்கும் நேரம் தெய்வம் வாழ்வில் ஜனிக்கும் நேரம் - பிரம்ம ஜனனம் - எனலாம். Defining Moment, Divine Hour, Hour of Life எனவும் கூறலாம்.

***

**ஜீவிய மணி**

***உலகம் நம்மை பாராட்ட வேண்டியது நமக்கு அவசியமில்லை.***

***நாம் திறமையை பெறுவது அவசியம்.***

***பெற்றதை முழுமைப்படுத்தினால் அதை பெறலாம்.***

***அம்முயற்சி பெருவெற்றி பெறும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நாம் நல்லெண்ணத்தை அளவு கடந்து உயர்த்தினால் மனத்தை கடக்கிறோம்***

## உடலின் சுபாவம் உயிரற்ற ஜீவனின் பேரமைதி

- பகவான் உலகுக்கு அளித்த ஆன்மீக ஞானம், யோக ஞானம் ஆகியவை பெரியவை.
- அன்னை பகவானை முதலில் சந்தித்தபொழுது கீதை யோகத்தை அவர் முடித்திருந்தார்.
- பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பகவத் கீதை சரியாக எழுதப்படவில்லை.
- ஓர் இந்தியர் அன்னையிடம் அதைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அது 1914க்கு முன்.
- இறைவன் நெஞ்சிலிருக்கிறான் என்பதை கீதை கூறுகிறது.
- அதை அறிந்த அன்னை சூறாவளியாக உள்ளே சென்றார்.
- ஓர் ஆண்டில் இறைவனை உள்ளே கண்டார்.
- அந்த நாளில் பாரிசில் அன்னை Cosmos என்ற குழுவில் தியானம் செய்வதுண்டு.
- தியானத்தில் ஓர் ஆசியரைக் கண்டார். மீண்டும் மீண்டும் கண்டார்.
- அவர் கரிய நிறமானவர். அவரை அன்னை 'கிருஷ்ணா' எனக் குறிப்பிட்டார்.
- தியோனை முதலில் சந்தித்தபொழுது அவரையே 'கிருஷ்ணா' என நினைத்தார்.
- வாழ்வின் மந்திரத்தைக் கண்டபொழுது தன் 'கிருஷ்ணா' தியோனில்லை எனக் கண்டார்.



- பகவானை மாடிப்படியில் முதலில் கண்டபொழுது 'இவரே என் கிருஷ்ணா' என அறிந்தார்.
- அன்னை வந்த புதிதில் miracles ஆச்சரியமான நிகழ்ச்சிகள் ஏராளமாக நடந்தன.
- அவை தெய்வீகமான சக்தி. அதனால் உலகம் திருவுருமாறாது என பகவான் அதைக் கைவிட்டார்.
- பகவான் யோகத்தை ஆன்மீக உலகில் பின்பற்றினார்.
- அன்னை யோகத்தை சூட்சும உலகில் அறிவார்.
- பகவானுக்கு சூட்சும உலகம் அன்னைபோல் பரிச்சயமில்லை.
- அந்த ஞானம் அன்னைக்கு அளவு கடந்துண்டு.
  - தன் உடலை விட்டு மீண்டும் மீண்டும் 12 முறை வெளி வந்தார்.
  - அவ்வுடலின் மீது சூரியனும், அதன் மீது சந்திரனும் உண்டு.
  - ஜடம் தன்னை மனம் கொடுமைப்படுத்தி அலட்சியம் செய்வதை சட்டமாக எதிர்பார்க்கிறது, எரிச்சல்படுவதில்லை.
  - பெண்கள் யோகத்திற்குப் பெரும் தகுதியுள்ளவர்.
  - மரம், செடி, கொடி, பூனை, எறும்பு பேசுவது அன்னைக்குப் புரியும்.
  - உடலுக்குரிய உணர்வுகள் ஏராளம். யோகம் அதை வெளிப்படுத்துவதில்லை.
  - சூட்சுமம் அந்த ஞானத்தைக் கொடுக்கும்.
  - உடல் காய்கறி போன்றது. உயிர் மரம்போல் எளிதில் போகாது.

    Coma என நாம் கூறுவது மயக்கம். அந்நிலையில் உடலின் பேரறிவு வெளிப்படும்.

    கால் கட்டை விரலை அசைத்தால் ஆப்பரேஷனான சிறுநீரகம் வேலை செய்யும்.

மனித உயிர் க்ஷணத்தில் பிரியும். மரம் மரணத்தை மெதுவாக ஏற்கும்.

உடலுக்கு மரத்தின் தன்மையுண்டு.

அதை vegetative serenity மரம் போன்ற மகத்துவம் என்கிறார்.

Hostile beings தீய சக்திகளும் என் குழந்தைகளல்லவா என்கிறார் அன்னை.

பகவானுக்கு அன்னை 59 வருஷம் கூறிய நன்றியறிதல் அதுபோன்ற உள்ளுணர்விலிருந்து எழுவது.

❀❀❀

**ஜீவிய மணி**

***நம் சக்தி அனைத்தும் செயலில் செலவானால் நம்மால் நம்மை பாராட்ட இயலாது.***

***நாம் அதை மறப்போம்.***

***நாம் மறந்ததை உலகம் ஏற்கும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மௌனம் கலையாமல் செய்யும் செயல்***

***மௌனத்தின் பின்னுள்ள மௌனத்தை எழுப்பும்.***



# பெண்ணின் பெருமை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

கோமாளி காலின்ஸை ஒருத்தி விரும்பி மணந்தாள். அது அவள் 2000 பவுனை மணந்ததாகும். டார்சி பணக்காரன். அவன் கர்வமாகப் பேசுவான். கர்வமாகப் பேசும் உரிமை அவனுக்குண்டு என சார்லெட் எலிசபெத்திடம் கூறுகிறாள். அது உலக நியாயம். எலிசபெத் அழகிற்குப் பேர் போனவளில்லை, பணமுமில்லை. 50 பவுன் ஆண்டு வருமானம், உடலும் உயிரும் சேர்ந்திருக்கப் போதுமானதில்லை. டார்சி அவளை அலட்சியம் செய்தான். பொதுவாகக் கர்வமானவன், சுயநலமானவன், பிறரை மட்டமாக நினைப்பவன். அவன் அவளை நெருங்கியதுபோல் மெரிடன் கிராமத்தில் எந்தப் பெண்ணை நெருங்கியிருந்தாலும் எந்தத் தடையுமின்றி முகமலர்ச்சியுடன் பேரதிர்ஷ்டமாகப் பெற்றிருப்பாள். நான் அன்பு செலுத்தாத ஒருவனை, நான் மணக்க மாட்டேன் என்ற காலத்திலும் பணத்திற்கும், அந்தஸ்திற்கும் முழு மரியாதையுண்டு. அவள் மனநிலை அப்படியில்லை. “என் தமக்கைத் திருமணத்திற்குத் தடையாக இருந்தாய். விக்காமுக்கு துரோகம் செய்தாய். கர்வி உன்னை மணப்பதை என்னால் கனவிலும் கருத முடியாது” என அவனையும், அவன் பெற்ற 10,000 பவுனையும் அவளால் மறுக்க முடிகிறது. கோமாளி என்பதால் 2000 பவுனை மறுக்க முடிகிறது எனில், அவள் மனம் உயர்ந்தது என்பது மட்டுமல்ல, உன்னதமானது; இது இலட்சியம் மட்டுமல்ல, உறுதியும்கூட. இலக்கியத்திலும் எளிதில் காண முடியாதது. வாழ்விலில்லை என்றே அனைவரும் கூற முயல்வர். இந்த தைரியம், தெளிவு, உறுதி அவள் எப்படிப் பெற்றாள்? அன்பாக, அதுவும் சுதந்திரமாகப் பிள்ளைகள் வளர்க்கப்பட்டால், அவர்கட்கு உயர்ந்த இலட்சியம் இயல்பாக எழும் என்பது தத்துவம். அக்குடும்பத்தில் பொதுவாகவுள்ள எந்தக் கட்டுப்பாடுமில்லை. “இதைச் செய்யாதே, அதைச் செய்” எனக் கூறும் பெரியவர் குடும்பத்திலில்லை. சுதந்திரம் பூரணமானது. தகப்பனார் எலிசபெத்தைத் தனியாகச் செல்லமாக வளர்த்தார். வளரும் சுதந்திரம்,

வாழும் சுதந்திரமாயிற்று. அவளால் அந்த உயர்ந்த இலட்சியத்தை எட்ட முடிந்தது. அதுவே அவன் மனம் மாறி இலட்சிய புருஷனாக, ஆதர்ச கணவனாக அவனுக்கு உதவியது. அவனை அவள் திட்டியது அன்றைய சமூகத்தில் இடம் பெறவில்லை. அது எலிசபெத்திற்கே உரியது. அவனை அவள் திட்டிய பொழுது கோபத்தின் மேதாவிலாசம் வெளிவந்து, இல்லாததை எல்லாம் கூறும் பொழுதும் ஆனந்தப்பட்டதாக எலிசபெத், ஜேனிடம் கூறுகிறாள். அவள் உயர்ந்த பெண். துரதிர்ஷ்டவசமாகப் போக்கிரியிடம் மனத்தை முதலில் கொடுத்துவிட்டாள்.

மனம் எவருக்கும் கட்டுப்படாது. முக்கிய நேரங்களில், முக்கிய விஷயத்தில் மனத்திடம் கட்டுப்பாட்டை எவரும் எதிர்பார்ப்பதில்லை. வதந்தியை அறிய ஆவல் கொள்ளாதவரில்லை. வதந்திகளில் இன்றுவரை தலையானது ஆண்-பெண் காதல் உறவு. ஆயிரம் ஆண்களும், பெண்களும் வேலை செய்யுமிடத்தில் கலந்து உறவாடும் பண்பாட்டில் ஒரு பெண் ஒரு ஆணிடம் அன்பாகப் பேசிவிட்டால், அரை மணி நேரத்தில் ஆபீஸ் முழுவதும் அறியும். அந்தச் செய்தியை, அறிய பெண்ணிற்கு அந்த ஆவல் ஆணைவிட சற்று அதிகம். அந்த விஷயத்தில் தன் மனத்தை எவரும் கட்டுப்படுத்த நினைப்பதில்லை. டார்சியைப் பற்றி Mrs.கார்டினர் அனைவரும் அறிந்ததை கேட்டிருக்கிறாள், உண்மையென நம்பியிருக்கிறாள். பெம்பர்லியில் டார்சி எலிசபெத்திடம் இதமாகப் பேசியதை அவள் கண்டதும் எழுந்த முதல் எண்ணம் இவனுக்கு இவள்மீது அபிப்பிராயமுண்டு என்பதே. சிறிது நேரம் கழித்து அவன் திரும்ப வந்து அவர்களை அறிமுகப்படுத்தக் கேட்டுக் கொண்டது, இனிமையாகப் பேசியது, வீட்டிற்கு அழைத்தது, மீன்பிடிக்க கார்டினரை அழைத்தது ஆகியவை டார்சிக்கு எலிசபெத் மீது காதல் என்ற கருத்தை உறுதி செய்தது. அவர்களுடன் நடந்து வந்த பொழுது லாங்பர்னைப்பற்றி சகஜமாகப் பேசியது, வண்டிவரை வந்து வழியனுப்பியது, மீண்டும் தளர்ந்து, பிரியாவிடை பெற்று வீடு திரும்பியது ஆகியவை முதல் எண்ணத்தை ஐயம் திரிபு அற ஆழ்ந்து உறுதிப்படுத்தியது. மறுநாள் லாம்டனுக்கு வந்து ஜார்ஜியானாவை அறிமுகப்படுத்தியது, விருந்திற்கு அழைத்தது,



உணர்ச்சியே உருவாக உருகி நின்றது ஆகியவற்றைப் பார்த்தபின் எவராலும் என்ன விஷயம் எனக் கேட்காமலிருக்க முடியாது. அப்படி முடிந்தாலும், அவரையறியாமல் பேச்சு வாயை மீறி வெளிவரும். ஆங்கில நாவல்களில் அனைத்திடங்களிலும் காணும் செய்தியிது. காதல் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கணமும் காப்பாற்ற முடியாது. Mrs.கார்டினர் பெண். இது மைத்துனர் பெண் எலிசபெத் விஷயம். டார்சி பெரும்நிலச்சுவான்தார். ஊரெல்லாம் பரவியுள்ள அபிப்பிராயத்திற்கு நேர்மாறாக நடக்கிறான். ஏற்கனவே பரவாயில்லை என்று கூறியதும் Mrs.கார்டினர் அறிந்ததே. அவள் கேட்டு அறிய வேண்டியது எதுவுமில்லை. வெளிப்படையாகத் தெரியும் விஷயம். இதுவரை தான் அறிந்தவற்றிற்கு நேரெதிராக இருப்பதில் புதிர். பெரும் அளவுக்குப் பிரியமாக ஏற்கனவே பழகாமல் டார்சி இப்படியிருக்க முடியாது என கார்டினர் நினைப்பது சரியெனினும், அது உண்மையில்லை என நாமும், எலிசபெத்தும் அறிவோம். என்ன விஷயம் என Mrs.கார்டினர் கேட்டிருந்தால் அதில் எந்தத் தவறுமில்லை. அதைக் கேட்காமலிருக்க முடியாது. கேட்காமலிருந்தது எலிசபெத்திற்குப் பெரும் நிம்மதி. பிறர் நிம்மதியைக் குலைக்கக் கூடாது, தர்ம சங்கடம் தரக் கூடாது என்று அவ்வளவு ஆர்வத்தையும், ஆவலையும் அடக்க எவராலும் முடியாது. பெண் கஷ்டப்படுமிடம். கார்டினர் அப்பரீட்சையில் தேறினார். அது பெண் பெற்ற பேறு. முடியாததை முடியும் எனச் செய்வது பண்பு, நிதானம், பொறுமை, இம்மியளவுமில்லாத தாயாருக்குப் பிறந்த எலிசபெத் கண்ட அற்புதம். ஆச்சரியம் அது. டார்சி போனவுடன் ஏதாவது கேட்டுவிடப் போகிறார்கள் என்று அவசரமாக எலிசபெத் தன் அறைக்கு ஓடிவிடுகிறாள். அவர்கள் கேட்டு, அவள் உண்மையைக் கூறியிருந்தால் அது நம்பிக்கைக்குரியதல்ல. அவர்கள் நினைத்தது சரி. அவளுக்கு எதுவும் தெரியாது என்பது உண்மை. அவன் நடந்து கொண்டது புதுமை. நிலைமை இக்கட்டானது. இக்கட்டான நேரம் இங்கிதமாக நடப்பதை இயல்பாகப் பெற்றவள் உயர்ந்த பெண்.

*முற்றும்*

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 14. ஒரு விவசாயியின் அனுபவம்

அவர் ஒரு சிறு விவசாயி; நடுத்தர வயதுக்காரர். ஆறு ஏக்கர் புன்செய் நிலம்தான் அவருக்கு இருந்த விளைநிலம். ஆனாலும் அவர் ஊரில் முக்கிய புள்ளிகளில் ஒருவராக இருந்தார். அரசியலிலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படுகின்ற அரசாங்கத் திட்டங்களுக்கு அங்குள்ள பிரமுகர்களின் ஆதரவு மிகவும் தேவைப்படும். அந்த விவசாயியின் ஆதரவு இல்லாமல் எந்த ஓர் அரசுத் திட்டமும் அந்த ஊரில் தலை நீட்ட முடியாது. அரசு வகுத்த பல திட்டங்களின் விளைவாக அவருடைய கிராமத்திலும் பல வசதிகள் பெருகின. கல்வி, சாலை, மின்சாரம், வங்கியின் உதவி, கூட்டுறவுச் சங்கம் போன்றவை அவற்றில் அடங்கும். அத்தகைய திட்டங்களின் பயனாக அவருக்கும் பல வசதிகள் கிடைத்தன. அதாவது அவருடைய விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம், குழாய்க் கிணறு, கடன் வசதிகள், புது ரக விதைகள், யாவும் கிடைத்தன. அவர் அந்தக் கிராமத்தில் வேகமாக முன்னேறி வரும் விதரணையான விவசாயியாகவும் இருந்தார். சிறு விவசாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் அவரைப் பாதிக்கவே செய்தன என்றாலும் அவருடைய முன்னேற்றம் பாதிக்கப்படவில்லை.

ஒரு சமயம் அவருக்கு ஆரம்ப முயற்சிகள் யாவும் சாதகமாக அமைந்தன. கடன் உதவிகள் காலாகாலத்தில் கிடைத்தன. மணிலாவைப் பயிர் செய்தார்; நல்ல விளைச்சல். எதிர்பார்த்ததைவிட அதிகமான மகசூல். ஆனால் விலைதான் அதலபாதாளத்திற்குச் சரிந்துவிட்டது. அதனால் வாங்கிய கடனை அவரால் அடைக்க



முடியாது போய்விட்டது. அதற்காக அவர் சோர்ந்துவிடவில்லை.

அது கோடைக் காலம். அந்தக் காலத்தில் சாதாரணமாக யாரும் மணிலாப் பயிர் செய்யத் தயங்குவார்கள். அதற்குக் காரணங்கள் பல. தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும்; கோடைக்கால மணிலாப் பயிருக்கெனவே உற்பத்தியாகும் பூச்சிகள் பயிர்களை நாசம் செய்யும்; அதனால் பெரிய அளவில் மகசூல் பாதிக்கும். சிறு விவசாயிகள் சூதாட்டம் போன்ற இந்தக் கோடைக் காலப் பட்டத்தில் மணிலாவைப் பயிர் செய்யத் தயங்குவார்கள். ஆனால் பெரிய விவசாயிகள் இந்தப் பட்டத்தில் மணிலாவைத் துணிந்து பயிர் செய்வார்கள். ஏனென்றால் குறைந்த அளவில் மட்டுமே சிலர் மணிலாப் பயிர் செய்வதால், விலை ஏறி விற்கும். அந்த அதிக விலையைக் குறியாக வைத்து, நஷ்டம் வந்தாலும் பாதகம் இல்லை என்ற துணிச்சலோடு பெரிய விவசாயிகள் மணிலாவைப் பயிர் செய்வார்கள். நம்முடைய சிறு விவசாயியும், பெரிய விவசாயிகளைப் போலக் கோடைப் பட்டத்தில் மணிலாப் பயிர் செய்யத் துணிந்தார். அவருக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு வரக் காரணம் இல்லை. ஏனென்றால் அவருடைய 'போர்' கிணற்றில் வற்றாது நீர் கிடைத்துக்கொண்டே இருக்கும். பூச்சி ஒரு பிரச்சினைதான். அதிர்ஷ்டம் இருந்தால் பூச்சித் தொல்லையும் இராது. அவர் கூட்டல், கழித்தல் கணக்குகளை அதிகம் போடாமல் ஆறு ஏக்கர் நிலத்திலும் மணிலாவைப் பயிர் செய்தார். பயிர் நன்றாக வளர்ந்தது. நல்லவேளையாகப் பூச்சித் தொந்தரவும் ஏற்படவில்லை. வழக்கம்போல ஏறின விலைக்கு மணிலா விற்றால் நல்ல லாபம் கிடைக்கும். கண்ணைப் பிடுங்கும் கடன்கள் தீர்ந்துபோகும். ஆகவே அவர் மணிலா மகசூலை மலைபோல நம்பிக்கொண்டு இருந்தார். அதற்கு அவர் பட்ட கடன் மட்டும் காரணமன்று; அந்தஸ்தும் ஒரு காரணம். பொதுவாக, கிராமங்களில் கடனாளிகளைத் தரக்குறைவாக நினைப்பார்கள். அதனால் அவர் தரத்தையும், 'பெரிய மனிதன்' என்ற அந்தஸ்தையும் காப்பாற்றிக்கொள்ள மணிலாப் பயிர் கைக்கொடுத்தால்தான் முடியும். 'நிச்சயம் கைக்கொடுக்கும்' என்ற

அளவில் பயிரும் செழிப்பாக வளர்ந்துகொண்டிருந்தது.

நாட்கள் நல்லவையாக நகர்ந்தன. பயிரும் அறுவடை செய்ய வேண்டிய பக்குவத்தை அடைந்துவிட்டது. பயிருக்கு இன்னும் ஒரு தண்ணீர் மட்டுமே தேவை. அதற்குப் பிறகு அறுவடைதான். அந்தச் சமயத்தில் திடீரென அவருடைய 'போர்' கிணறு காலை வாரி விட்டுவிட்டது. கிணற்றின் அடியில் உள்ள நீர் ஏற்றுக் குழாயில் அடைப்பு ஏற்பட்டுத் தண்ணீர் இறைக்க முடியாமல் போய்விட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சிக்கல்களைச் சரி செய்து, 'போர்' மூலம் தண்ணீரை இறைப்பதற்கு குறைந்தபட்சம் ஆறு வார காலம் ஆகலாம். அப்பொழுது சித்திரை மாதத்து அக்கினி நட்சத்திர வெயில் நெருப்பாகக் கொளுத்தியது. பூமி வறண்டு, பயிர்கள் காய்ந்தன. இந்த நிலையில் 'போரை'ச் செப்பனிடத் தேவையான ஆறு வார காலம் வரை தண்ணீர் இல்லாவிட்டால் பயிர் தாங்காது. என்ன செய்வது? அக்கம்பக்கத்தில் தண்ணீர் இறைத்துக்கொள்ளவும் வசதி இல்லை. ஏனென்றால் அவரைத் தவிர வேறு எவருக்கும் 'போர்' கிணறு இல்லை. இப்படியும் ஒரு சோதனையா? தண்ணீர் தட்டுப்பாட்டிலிருந்த பயிரை எப்படிக் காப்பாற்றுவது? அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம்; வேதனை.

ஒரு நாள் காலை பத்து மணிக்கு அவர் தம் கிராமத்திலிருந்து புறப்பட்டு, நகரில் உள்ள என் வீட்டிற்கு வந்தார். நான் அவரை எதிர்பார்க்கவில்லை. அவர் முகம் அவ்வளவு மோசமாக வாடக்கூடும் என்பதையும் நான் எதிர்பார்க்கவில்லை. ''உங்களுக்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டேன். "இன்னும் எதுவும் நேரவில்லை. ஆனால் நேர்ந்துவிடுமோ என்று பயப்படுகிறேன். நேற்றுவரை நான் மிகவும் நம்பிக்கையோடு இருந்தேன். இப்பொழுது என் நம்பிக்கையே ஒரு நாகம் போலப் படம் எடுத்து அச்சுறுத்துகிறது. அழுது கதற வேண்டும்போல இருக்கிறது. உள்ளூரில் கத்தினால் கேவலம். ஆறுதலைத் தேடி உங்களை நாடி வந்திருக்கிறேன். கருணைகூர்ந்து



நான் சொல்லும் சோகத்தைத் தயவுசெய்து கேட்பீர்களா?'' என்று கேட்டுவிட்டுக் கண்களில் நீர் தளும்ப என்னைப் பார்த்தார். ''கேட்கிறேன், சொல்லுங்கள்'' என்றேன் நான். நான் முன்பு விவரித்ததை எல்லாம் விரிவாகக் கூறினார் அவர். நான் அவர் கூறியதைக் கவனமாகவும், கனிவாகவும் கேட்டேன். சொல்லி முடிக்கும் பொழுது அவர் முகத்தில் முன்பு காணப்பட்ட சோகமும், வாட்டமும் மறைந்து விட்டிருந்தன. அவர் மனத்தை அதுவரை அழுத்திக்கொண்டிருந்த பாரம் நீங்கியதற்கு அடையாளமாக அவர் கண்களில் ஒரு பிரகாசம் சுடர்விட்டது.

அவருக்கு இப்பொழுது வேண்டியது எல்லாம் நம்பிக்கை. நான் அதைத்தான் கொடுக்க வேண்டும். கொடுத்தேன். ''நீங்கள் கடுமையான உழைப்பாளி. பயிருக்குச் செய்ய வேண்டிய அனைத்தையும் கவனமாகச் செய்து இருக்கிறீர்கள். ஆகவே உங்கள் பயிர் வீணாகிப்போகாது''. அவர் விவரம் புரிந்தவர்தாம். ஆனால் நான் சொன்னது அவருக்குப் புரியவில்லை. ஆனாலும் கவனமாகக் கேட்டார். ''எதையும் பொறுப்பாகச் செய்பவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடுவதில்லை. அப்படிப்பட்டவர்களை இறைவன் தன் பொறுப்பில் வைத்துக் காப்பாற்றுகிறான்'' என்ற கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினேன்.

நடைமுறைச் செயல்களைப்பற்றி மட்டுமே நன்கு சிந்திக்கத் தெரிந்திருந்த அவருக்கு, என் பேச்சு ஒரு புதிர்போல இருந்தது. ஆனாலும் அது தன்னை எதிர்நோக்கியுள்ள அவல நிலையிலிருந்து விடுபட ஒரு வழியைத் தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கையை அவரிடத்தில் அரும்பச் செய்துவிட்டது.

அன்னை மையத்தைப்பற்றி அவர் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் அவர் அங்குச் சென்று வழிபட்டதில்லை; அன்னையைப்பற்றி அறிந்திருக்கவுமில்லை.

“அன்னையைப் பிரார்த்தனை செய்துகொண்டால் உங்கள் பயிர் நிச்சயம் பிழைத்துக்கொள்ளும். ஆனால் ‘இது எப்படி நடக்கும்?’ என்று சிந்தனையை முறுக்கிவிடல் கூடாது. ‘பயிர் பிழைத்துக்கொள்ளும்’ என்று முழுவதுமாக நம்ப வேண்டும். அன்னையிடம், ‘பயிர் பிழைக்க வேண்டும்’ என்று வேண்டிக் கொண்டு வாருங்கள்” என்றேன் நான்.

அவர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். அக்கணமே சோர்வுக்குத் தீர்வு கண்டுவிட்டதைப் போன்றதொரு தெளிவு அவர் முகத்தில் தெரிந்தது. அதைக் கூர்ந்து நோக்கிய நான், ‘அவருடைய பயிர் நிச்சயம் பிழைத்துக்கொள்ளும்’ என்று நினைத்தேன்.

மறுநாள் இரவு நல்ல மழை. ‘இங்கு பெய்கின்ற மழை அந்த விவசாயியின் கிராமத்திலும் பெய்தால், அவருடைய பயிர் பிழைத்துக்கொள்ளும். ஒருவேளை அங்கு பெய்கின்ற மழைதான் இங்கு பெய்கின்றதோ?’ என்றெல்லாம் எண்ணிக் கொண்டேன் நான்.

அதற்குப் பிறகு பல நாட்கள் உருண்டோடிவிட்டன. ஒரு நாள் அந்த விவசாயி மலர்ந்த முகத்தோடு என் வீட்டிற்கு வந்தார். “நீங்கள் கூறிய வார்த்தைகள் என் சோர்வை அகற்றின; என் மனத்திலிருந்த அவநம்பிக்கையை விரட்டின; எனக்குத் தெம்பை அளித்தன; உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டதும் நேராக வீட்டிற்குச் சென்றேன். பணத்தை எடுத்துக்கொண்டு அன்னை மையம் சென்று அன்னையை தரிசனம் செய்தேன். அங்கு சென்றது அதுதான் முதல் தடவை. அங்கு எப்படி வழிபாடு செய்ய வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆம், நான் என்னை மறந்து நின்றேன். நான் என்ன வேண்டிக்கொண்டேன்! தெரியவில்லை. என் உடலில் ஆட்டம், அசைவில்லை. எதையாவது நினைத்து, நினைத்து கூச்சலிடும் மனத்தில் இப்பொழுது அலைகள் இல்லை. என்ன ஆனந்தம்! என்ன சுகம்! நான் எத்தனை நேரம் அப்படி ஓய்ந்தும், தோய்ந்தும் போயிருந்தேன்! காலத்தைக் கணக்கெடுக்க முடியாத தவிப்போடு



கண்களைத் திறந்து பார்த்தேன். அங்கு வைக்கப்பட்டு இருந்த அழகிய மலர்கள் என்னை ஆசீர்வாதம் செய்தன. பலர் தியானம் செய்துகொண்டு நின்ற காட்சி, அது ஒரு தபோவனம் என்பதை மெய்ப்பித்தது. அமைதியும், ஆறுதலும் என் நெஞ்சம் எல்லாம் நிறைய, நான் மையத்தை விட்டுப் புறப்பட்டு ஊருக்குச் சென்றேன். வீட்டுக்குப் போய்ச் சேர்கின்றவரை எனக்கு எந்த நினைவும் இல்லை. பயிரைப்பற்றிய நினைவுகூட வரவில்லை.

அன்று இரவு நல்ல மழை! மையத்திற்கு போய் வந்த உடனேயே அன்னையின் ‘கருணை மழை’ பெய்துவிட்டது. என் பயிரும் காப்பாற்றப்பட்டுவிட்டது. அன்னையின் அருளை எண்ணி மெய்சிலிர்த்தேன். நன்றியால் தழுதழுத்தேன். மறுநாள் பொழுது விடிந்ததும் நான் என் நிலத்தை நோக்கி ஓடினேன். ஆவலோடு பயிரைப் பார்த்தேன். நேற்றுவரை காய்ந்து போயிருந்த பயிர்கள், இப்பொழுது பசுமையாகத் ‘தளதள’வென்று இருந்தன. கிணற்றுத் தண்ணீரைப் பாய்ச்சி இருந்தால்கூடப் பயிர் இத்தனை நன்றாகத் தெளிந்து இருக்காது. பயிருக்குத் தேவை ஒரு பாட்டம் தண்ணீர்தான். அது இப்பொழுது தாராளமாகக் கிடைத்துவிட்டது. அதற்குப் பிறகு என்ன, மகசூல் எதிர்பார்த்ததை விட அதிகமாகக் கிடைத்தது. விலையும் சென்ற வருடத்தைவிட அதிகமாகக் கிடைத்தது. அதனால் கடன் முழுவதும் பாக்கி இல்லாமல் அடைந்ததோடு, போக இருந்த என்னுடைய மானம், மரியாதைகளும் காப்பாற்றப்பட்டன. அதற்குக் காரணம் அன்னையின் அளப்பரிய கருணை!” என்று பரவசத்தோடும், தழுதழுப்போடும் கூறி முடித்தார் அவர்.

ஆமாம், அன்னையின் கருணை அளப்பரியது. தம் அன்பர்களைக் காத்து ரட்சிக்க அது எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கின்றது.

*தொடரும்....*

❀❀❀

## அன்பர் அனுபவம்

அன்றும் வாழ்ந்தோம். இன்றும் வாழ்கிறோம். வாழும் வாழ்க்கையிலும், வாழும் விதத்திலும் எத்தனை வித்தியாசம். காதில் விழுந்தபோதும், கண்ணில் கண்டபோதும் வராத நம்பிக்கை உணர்ந்த வினாடியிலேயே வந்தது. "நான் உன் வாழ்வில் வரத்தான் போகிறேன்" எனத் தலையிலடித்து உணர்த்தி, எம் வாழ்வில் புகுந்த அன்னை இன்று எங்கள் வாழ்க்கையாகி, கருணையினால் எம்மை சிலிர்க்க வைத்த சம்பவங்கள் பல. உணர்ந்தவை எல்லாவற்றையும் எழுத முடியாது. எழுதியவை கூடி உணர்த்தியவை ஆகாது. நாங்கள் உணர்ந்த அந்த எல்லையில்லாத கருணையை எங்ஙனம் விளக்கி எழுதுவது என்பதே குழப்பமாக உள்ளது.

B.Ed. சேருவதற்காக விண்ணப்பித்திருந்தேன். நான், விண்ணப்பம் செய்யும்போது மனதில் நம்பிக்கையில்லை. சேர்ந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சியம். நம்பவே முடியவில்லை. நடந்தவை எதுவும் மனித சக்திக்கு உட்பட்டதாக இல்லை. இரண்டு நாட்கள் கெடு கொடுத்து ரூ.4,000/- கட்டச் சொல்லி கடிதம் வந்தது. பணம் கட்டினால் B.Ed. சேரலாம் என்று எழுதியிருந்தது அந்த கடிதத்தில். என் கணவரின் வேலையோ பீஹார் மாநிலத்தில் ஒரு காட்டின் மலைப் பகுதியில். வீட்டிற்கு நிலையை விளக்கி கடிதம் எழுதக்கூட நேரமில்லை. மாதக் கடைசியில் ஒவ்வொரு நாணயத்தையும் யோசித்து செலவழிக்க வேண்டிய நிலையில் ரூ.4,000/- எப்படி முடியுமென தளர்ந்து போய்விட்டோம். வங்கியில் இருந்த பணம் ரூ.100/-. என் கணவரோ சோர்ந்துபோய், இயலாமையை எண்ணி நொந்துபோய் முடங்கிவிட்டார். நானும்தான். விரக்தியில் சிரிப்பதா, அழுவதா எனத் தெரியவில்லை. முகம் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என பணம் எங்கிருந்தோ வந்தது. எப்படியோ உரியவரிடம் போய் சேர்ந்தது. எப்படியென யோசித்ததில் ஒன்று புரிந்தது. நான் ஒரு ரூபாய் மட்டும் வைத்து, "தாயே, நான் தகுதியானவளானால் எனக்கு இந்த பட்டம் கிடைக்கட்டும். நாங்கள் எந்த நிலையிலும் யாரிடமும் கடன் வாங்கத் தயாரில்லை" என்று மட்டும் கூறினேன். நாங்கள் அந்த பட்டத்திற்காக செலவழித்த பணம் ரூ.7,000/-. அதற்கு எங்கிருந்து பணம் எப்படி வந்ததென புரியாத புதிர்தான். அது புரிந்துவிட்டால் அந்த அருளுக்கு அர்த்தமேது! மௌனமாகவே அது உணரப்பட்டு வந்தது இந்நாள் வரையில் – இன்றுதான் அதற்கு ஓசை வடிவம் கொடுத்துள்ளேன். அந்த படிப்பிற்காக எட்டு நாட்கள் கண்டிப்பாக வகுப்புகள் செல்ல வேண்டிய நிலை. அந்த விபரமும் எங்களுக்கு கிடைக்க கடைசி நாளாகிவிட்டது. என் கணவரோ வேலைகளின் கெடுபிடியில். அந்த ஊரில் ஆண் துணை இருந்தாலே நடமாடுவது கடினம். அவரை வேலை விஷயமாக டெல்லி போகுமாறு அவருடைய மேலதிகாரியும் அதே தேதியைக் கொடுத்திருந்தார். மீண்டும், மீண்டும் அவர்தான்! அவரேதான்! தானாக எல்லாம் நடந்தது. ராஜ மரியாதையோடு நாங்கள் கல்கத்தா அனுப்பி வைக்கப்பட்டோம். மீண்டும் கவலை! எட்டு நாட்கள் எங்கே தங்குவது? செலவுகளை எப்படி சமாளிப்பது? மூன்று வயது குழந்தையை வைத்துக் கொண்டு சாப்பாட்டிற்கு என்ன செய்வது?

"எண்ணியெண்ணி பார்க்கும் வேலை இல்லை இனி அம்மா! எந்தன் பாதை என்னவென்று எழுதி வைத்தாய் அம்மா!", இதை நினைத்துக்கொண்டே ரயிலை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த நேரத்தில் ஒருவர் வந்தார். வந்து தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டார். தானே எல்லாம் செய்வதாக அவரே முன்வந்தார். அவரோ கல்கத்தாவில் செல்வாக்குள்ள விமானப் படையை சேர்ந்த காவல் துறை அதிகாரி. அவரை அழைத்துச் செல்ல வந்திருந்த வண்டியில் அவர் எங்களை முதலில் ஏற்றி, எங்களை கவனித்த விதம் – இன்று நினைத்தாலும் தலை முதல் பாதம் வரை சிலிர்க்கிறது. அவருடைய அலுவலகத்திலேயே எங்களைத் தங்க வைத்தார். ஒருவர் கட்டில் எடுத்து வந்து கொடுத்தார். ஒருவர் கொசுவத்தி கொடுத்தார். ஒருவர் உணவு கொண்டு வந்தார்.

எல்லோரையுமே அன்னையாகதான் பார்த்தேன்! "எங்கும் உன் அருளமுதம் தா!" என பாடிக் கொண்டேயிருந்தேன்.

அங்கேயிருந்த ஒரு வயதான தாத்தா என் குழந்தையை ஈன்றெடுத்தவர் போல நேரம் தவறாது குழந்தைக்கு உணவளித்தார். அங்கேயிருந்த பல சகோதரர்கள் என் குழந்தையை மிகவும் பாசமாக பார்த்துக் கொண்டார்கள். மனிதர்கள்தானே! இவர்களின் இத்தனை நேயம் வந்தது எங்ஙனம்! முகம் வாடாமல், சிறிதும் கோணாமல் உதவியது எங்ஙனம்! அவர்தான்! மீண்டும் அவரேதான்!

இதற்கிடையில் அலுப்பு தாங்காமல் குழந்தையின் உடல்நலம் பாதிக்கப்பட்டு, அதிகமாகியது. அங்கேயிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது குழந்தையின் தந்தை என் கணவர்தானென்பதற்கு ஆதாரமாக அடையாள அட்டை வேண்டுமென்றார்கள்! மீண்டும் அழைத்தேன்! "அம்மா! இது என்ன தாயே! சாட்சி வைத்துக்கொண்டா வம்சத்தை விருத்தி செய்ய!" எதுவுமே தேவையில்லையென காய்ச்சல் தானாகக் குறைந்தது.

அதன் பிறகு தேர்வுகள் எழுதி, வெற்றி பெற்று, சந்தோஷம் கிடைத்தது உண்மை. என் கைகளில் அந்த சான்றிதழை கொடுக்கும் வரை ஓயமாட்டார் என்பதும் தெரியும். "என்னிடம் இதை நீ கேட்டுவிட்டாய். அதனால் உனக்கு இதை சார்ந்தவற்றையும் நானே கொடுக்கிறேன்" என அவர் சொல்வது போலத் தோற்றம். ஏனெனில் இந்த சான்றிதழ் கைகளில் கிடைக்குமுன்னே வேலைக்கான அழைப்புகள் வந்தவண்ணமுள்ளன. நாங்கள் யோசிப்பதை நிறுத்தி வெகுநாட்களாகின்றன. அவராக எது கொடுக்கிறாரோ அதுதான் வாழ்க்கை. எங்கே காட்டுகின்றாரோ அதுதான் பாதை.

❋❋❋



# Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### Chapter 2 – The Materialist Denial

81. Tradition has a tirade against life, calls it evil, and asks us to shun it.
**Sri Aurobindo says the Absolute supports life with its vast strength.**
மரபு வாழ்வை தீயது என்று நிந்தித்து, நம்மை அதை விலக்கச் சொல்கிறது.
**ஸ்ரீ அரவிந்தர் இறைவன் தன் பெரும் வலிமையால் வாழ்வை ஆதரிக்கிறான் என்கிறார்.**

82. The materialist is not able to perceive anything immaterial or not organised as gross Matter.
**Sri Aurobindo accuses them of the vice of the argument in a circle.**
ஜடமற்றதையோ, ஸ்தூல ஜடமாக இல்லாததையோ, பொருள்முதல்வாதியால் ஏற்க முடியவில்லை.
**பொருள்முதல்வாதியின் கருத்து வட்டத்தைச் சுற்றிவரும் தவறான கருத்து என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.**

83. Tradition faithfully repeats the formulas of a bygone century.
**Sri Aurobindo points out the increasing evidences of the supraphysical. He says intellects can be limited in spite of their acuteness.**

கடந்தகாலத்தின் சூத்திரங்களை மரபு விசுவாசத்துடன் திரும்பத் திரும்பச் சொல்கிறது.

**சூட்சும நிலை உண்டு எனக் காட்டும் ஆதாரங்கள் பெருகிவருவதை சுட்டிக்காட்டி, புத்திசாலிகளின் கூரிய அறிவும்கூட அளவிற்குட்பட்டதே என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

84. Tradition jealously conserves the dying or dead intellectual dogmas.

**Sri Aurobindo affirms the existence of the worlds beyond.**

முடிந்துவிட்ட, தேய்ந்துவரும் அறிவுபூர்வமான கோட்பாடுகளை மரபு பொறாமையோடு பாதுகாத்து வருகிறது.

**நம் உலகிற்கு அப்பாற்பட்ட உலகங்கள் உண்டு என்று ஸ்ரீ அரவிந்தர் உறுதியாகக் கூறுகிறார்.**

85. Materialism tries to return to the Non-Being.

**Sri Aurobindo pleads for the extension of the field of consciousness to settle the ancient quarrel.**

பொருள்முதல்வாதம் அசத்திற்குத் திரும்ப முயல்கிறது.

**ஆதிகாலந்தொட்டு வரும் பிணக்கைத் தீர்க்க ஸ்ரீ அரவிந்தர் ஜீவியத்தின் தளங்களை நீட்டிக்க வேண்டும் என்கிறார்.**

*தொடரும்....*

❃❃❃

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## பைத்தியத்தின் பக்தி

எனக்கு சித்த ஸ்வாதீனம் போனபின் பக்தியிருக்குமாயென யோசனை செய்த மகான் ஒருவர். அந்த நேரம் அற்புதமான ஆன்மீக இலக்கியம் படைத்தார். தவறான இடங்கள், கறுப்புச் சூழல், பிறர் கெட முனையும் இடங்கள், பெரிய இடங்கள், இருண்டு வருபவர்களை தண்டிக்கும் உயர்ந்த இடங்கள், சடங்கு, சம்பிரதாயம், காட்டேரி கும்பிடும் இடங்கள் ஆன்மீக இலட்சியமுள்ளவர்க்கு விலக்கு. தவிர்க்க முடியாமல் அமைந்துவிட்டால் தண்டனையை பெறாமல் தப்பிக்க முடியாது. இந்நிலை அன்பருக்கில்லை. ஏதோ காரணத்தால் இந்த அசம்பாவிதம் நிகழ்வதும் உண்டு. அப்படி நிகழ்ந்த நேரம் அன்பர் விழித்துக் கொண்டால் அற்புதமாக சித்தி பெறும் நேரமாக அது திருவுருமாறும். புதியதாக மந்திரம் மாயம் கற்பவர் தாங்கள் பெற்றதை சோதனை செய்ய பெரிய மகான் மீது பிரயோகிப்பார்களாம். இதுபோன்ற ஆபத்தான நேரம் அன்பர் உள்ளே போனால் ஆபத்தை அடியோடு அழித்து அற்புத சித்தியாக திருவுருமாற்றும் சக்தி அழைப்பிற்காகக் காத்திருப்பது தெரியும். தெரிந்த பின் வேலை அன்பருக்கில்லை. அதுவே செயல்படும். அழிய வேண்டியதை அழிக்கும். யுகாந்தரம் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டியதே அன்பர் கடமை. அழிவு முடிந்தால் ஆக்கம் எழும். அதுவும் தானே நடக்கும். அதிவேகமாக நடக்கும். தானே தன்னைப் பூர்த்திச் செய்து கொள்ளும். சாட்சி புருஷனாக இருந்து சாதித்தால் போதும். அதையும் கடந்து, அதனுடன் இணைந்து சாதிக்கும் ஆனந்தத்தில் பங்கு கொண்டால், “ஆண்டவன் இப்படித்தான் ஆனந்தம் பெறுகிறாரா!” என அன்னை கூறியது ஆழத்தின் கருவில் அறிவிக்கும்.

## சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரை 9 வயதில் கண்ட ஒரு மகான், “இவர் தெய்வ அம்சம் உள்ளவர்” எனக் கூறினார். “சுவாமி விவேகானந்தரும், தியசாபிகல் சொஸைட்டியும் இந்தியா கிருஸ்துவமயமாவதைத் தடுத்தனர்” என பகவான் கூறுகிறார். சிக்காகோவில் சுவாமி பேசியதைக் கேட்ட டெஸ்லா பிரம்மச்சாரியாக முடிவு செய்தார். இவர் யூகோஸ்லாவியாவில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர். எலக்ட்டிரிக் மோட்டார் கண்டுபிடித்தவர். எடிஸன் போன்ற மேதை. இன்று சர்வதேச அரங்கில் பிரபலமாக உள்ளவர்களைக் கண்டு பேசும் பொழுது, ஒருவர் பங்களாதேஷில் ஏழு வருஷமிருந்து, அங்கேயே மேல்நாட்டுப் பெண்ணை சந்தித்து மணந்தார் என அறிகிறோம். Steve Jobs *ஆப்பிள்* கம்பனி முதலாளி இந்தியாவில் ஆன்மீகத்தைத் தேடி 7 மாதம் பிரயாணம் செய்தார் என்று தெரிகிறது. இந்தியா புண்ணிய பூமி. ஏதோ ஒரு வகையில் இந்தியாவுடன் தொடர்பு கொண்ட மேல்நாட்டார் அனைவரும் பெரிய அளவில் சாதனை செய்திருக்கிறார்கள். இங்கிலாந்து இந்தியாவை ஆண்டது. மகாத்மா காந்தியின் அஹிம்சையை இங்கிலாந்து பெற்று ஹிட்லரை எதிர்க்க மறுத்தது. தொடர்பு என ஏற்பட்டால் அதன் பலன் இல்லாமலிருக்காது. இங்கிலாந்து இந்தியாவை ஆண்டு, உலகில் பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவியது. தொடர்புக்கு சக்தியுண்டு. நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. மார்ட்டின் லூதர் கிங் மகாத்மாவின் அஹிம்சை, ஒத்துழையாமைப் போராட்டம் ஆகியவற்றைப் பெரிய அளவில் பின்பற்றினார். இந்தியா உலகை நாத்திகவாதத்தினின்று காப்பாற்றும் எல்லா அறிகுறிகளும் காணப்படுகின்றன.

Vol. III Issue 4 July 2013
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


## புதிய வெளியீடுகள்

ESSAYS ON ACCOMPLISHMENT — ரூ.150/-
N.Asokan

### கர்மயோகியின்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

### சொசைட்டியின் பிற வெளியீடுகள்

SATYA JYOTHI — ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

### கிடைக்குமிடம்

*பாண்டியில்*

மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

*சென்னையில்*

மாம்பலம் தியான மையம்,
Priams, 'Golden Wattle', கதவு எண் 36,
கோபால் தெரு, அருணா ஹோட்டல் அருகில்,
தி.நகர், சென்னை - 600 017.
✆: (044)-24347191


Vol. III Issue 4 July 2013

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2013